**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி, பழனி.**

**2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**இ.ம.எண்.1/2025**
**இன்**
**அ.வ.எண்.44/2025**

**M.துரைச்சாமி ... மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

**1. M. தங்கவேல்,**
**2.T. கண்ணன்,**
**3.M.சுந்தரம்,**
**4.O.M.சரஸ்வதி. ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

**இந்த மனுவானது 12.08.2025ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர் D.கார்த்திக்ராஜா மற்றும் திருமதி.K.சோபனா ஆகியோர் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் C.பாலமுரளிமோகன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் K.அன்பரசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...**

**<u>உத்தரவு</u>**

**முறையாக பாகப்பிரிவினை முடியும் வரை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மனுச் சொத்துக்களில் உழவடை செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கும்படி கோரி உ.வி.மு.ச. கட்டளை 39, விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன்படி மனுதாரர்/வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**<u>2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–</u>**

**மனுதாரர் அசல் வழக்கில் வாதி. 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் உடன் பிறந்தவர்கள். 3ம் எதிர்மனுதாரர் 1, 2 எதிர்மனுதாரர்களிடம் குத்தகைக்கு பெற்றதாக கூறப்படும் நபர் வழக்கு 1 முதல் 3 இனச் சொத்துக்கள் மனுதாரரின் தாயார் பாப்பம்மாளுக்கு பாத்தியப்பட்டது. அவர் முதலாம் இனச் சொத்தை 25.01.2000 அன்றும்,**

2 மற்றும் 3ஆம் இனச் சொத்துக்களை 04.07.1980 அன்றும் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணங்கள் வாயிலாக கிரையம் பெற்று சொத்துக்களை தனது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்தார். 4ம் இனச் சொத்தானது மனுதாரரின் தகப்பனார் முத்துச்சாமியால் 15.03.1967 அன்று கிரையம் பெறப்பட்ட சொத்தாகும். 03.07.1993 அன்று முத்துச்சாமி அவரது மனைவியான பாப்பம்மாள், மனுதாரர், 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டபடியால், மேற்படி நால்வரும் 4ஆம் இனச் சொத்தை அடைந்து அனுபவித்து வந்தனர். பாப்பம்மாள் 4.07.2001 அன்று 1 முதல் 3 இனச் சொத்துக்களைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி உயில் ஆவணத்தில் பாப்பம்மாள் மனுதாரருக்கும்,1 மற்றும் 4 எதிர்மனுதாரர்களுக்கும் 1 முதல் 3 இனச் சொத்துக்களில் சம பாத்தியம் வழங்கியுள்ளார். பாப்பம்மாள் 04.08.2012 அன்று இறந்துவிட்டார். அதற்குபிறகு மேற்படி உயில் ஆவணம் அமலுக்கு வந்து, 1 முதல் 3 இனச் சொத்துக்களிலும், 4 ஆம் இனச் சொத்திலும் மனுதாரருக்கும், 1, 4 எதிர்மனுதாரர்களுக்கும் சம பாத்தியம் ஏற்பட்டுள்ளது. மனுதாரர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை பார்த்த சமயம் பணியிடங்களில் தங்கியிருந்ததால் அதனை வாய்ப்பாக எடுத்துக் கொண்டு 1 ஆம் எதிர்மனுதாரர் 1ஆம் இனச் சொத்தில் விவசாயம் செய்து வந்தார். 2003ஆம் வருடம் மனுதாரர் ஓய்வு பெற்றபிறகு, 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்களிடம் முறையாக பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் எனக் கேட்டபோது, அவர்கள் அலட்சியமாக பதில் கூறி வந்தனர். 01.12.2024 அன்று காலை 10.00 மணியளவில் மனுதாரர் 1–ஆம் இனச் சொத்திற்கு சென்றபோது, 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் உழவு செய்து வந்தனர். மனுதாரர் அதனை நிறுத்துமாறு கேட்டபோதும் அவர்கள் கட்டுப்படவில்லை. ஊர்ப்பெரியவர்கள் மூலம் பேசியபோதும் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சமரசத்திற்கு வரவில்லை. 3ஆம் எதிர்மனுதாரர் வழக்குச் சொத்திற்கு சம்பந்தம் இல்லாதவர். அவர் தன்னை 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களின் குத்தகைதாரர் என்று கூறியுள்ளார். மனுதாரருக்கும் மனுச் சொத்தில் சமபாகம் இருக்கும் நிலையில், அவரது பங்கையும் சேர்த்து மனுதாரரின் சம்மதம் இன்றி உழவு செய்வது சரியல்ல என்றும், எனவே, 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் பாகப்பிரிவினை

ஏற்படும்வரை வழக்குச் சொத்தில் உழவு செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும்.

3. <u>**1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**</u>:

1 முதல் 3 இனச் சொத்துக்களை மனுதாரரின் தாயார் பாப்பம்மாளும், 4 ஆம் இனச் சொத்தை மனுதாரரின் தகப்பனார் முத்துச்சாமியும் கிரையம் பெற்றதாக கூறுவது ஒப்புக் கொள்ளப்படுகிறது. உண்மையில் 4ஆம் இனச் சொத்தை மனுதாரரை தனது தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்தார். பாப்பம்மாள் 1 முதல் 3 இனச் சொத்துக்களைப் பொறுத்து உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளதாகக் கூறுவது ஒப்புக் கொள்ளப்படுகிறது. உண்மையில், இந்த வழக்கின் மனுதாரர்/வாதியே பிராது 2, 3, 4 வது அயிட்டச் சொத்துக்களான குடியிருப்பு வீடுகளை வாடகைக்கு விட்டு கிடைத்த மாத வாடகை வருமானங்களை நாளது தேதிவரை அடைந்து அனுபவித்து வருகின்றார். மனுதாரர் மற்றும் 1, 4 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் முத்துச்சாமி அரசுப் பள்ளி ஆசிரியராக பணியாற்றி வந்தநிலையில், அவரது மனைவியான பாப்பம்மாள் தனது கணவர் காலத்திற்கு பிறகு ஓய்வூதியம் பெற்று வந்தார். மனுதாரர் தனது தாயாரை துன்புறுத்தி அவரது ஓய்வூதியத்தை வலுக்கட்டாயமாக பறித்துச் செல்வதை வாடிக்கையாக கொண்டிருந்தார். பாப்பம்மாளின் கனரா வங்கிக் கணக்கு எண். 1018101030397 –ல் இருந்து, 2006, 2007 வருடங்களில் பல்வேறு தேதிகளிலும், இறுதியாக 05.05.2012 வரை வாதியே தொடர்ந்து, தொகை வகையறாக்களை எடுத்துள்ளது தெரிய வருகிறது. அதற்கு 4ஆம் எதிர்மனுதாரரும் கூட்டு சேர்ந்து செயல்பட்டுள்ளார். சீதனமாக வந்த வகையிலும், முத்துச்சாமி அவரது மாதாந்திர ஊதியத்திலிருந்து வாங்கிக் கொடுத்த வகையிலும் சுமார் 40 பவுன் தங்க நகைகளையும், பொதுக்குடும்ப நிதி ரூ.2,00,000/–யும் பாப்பம்மாள் வைத்திருந்தார். 04.08.2012 அன்று பாப்பம்மாள் காலம் சென்ற பிறகு அன்றே அவரது 40 பவுன் நகை மற்றும் குடும்ப நிதியான ரூ.2,00,000/– ஆகியவற்றை மனுதாரரும், 4ஆம் எதிர்மனுதாரரும் எடுத்துச் சென்றுவிட்டனர். மனுதாரரும், 4ஆம் எதிர்மனுதாரரும் கடந்த 21.09.2012 அன்று 1ஆம் எதிர்மனுதாரருக்கு விற்பனை இல்லாத பொது அதிகார ஆவணத்தை எழுதிக் கொடுத்துள்ளனர். அதில் நிலத்தில் விவசாயம்

செய்யவும், குத்தகை ஆவணங்கள் வழங்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1ஆம் இனச் சொத்தை ரூ.5,00,000/- செலவில் 1ஆம் எதிர்மனுதாரர் சமப்படுத்தி வளப்படுத்தியுள்ளார். வயோதிகம் ஆகிவிட்டதால் 3ஆம் எதிர்மனுதாரரை பணிக்கு அமர்த்தி விவசாயப் பணிகளை அவர் மேற்கொண்டு வருகிறார். 2, 3, 4 இனச் சொத்துக்களில் 5 பகுதிகளைக் கொண்ட குடியிருப்பு வீடுகள் உள்ளது. அவற்றை வாதி அவரது அனுபவத்தில் வைத்து, வாடகைக்கு விட்டுள்ளார். 2, 3, 4 இனச் சொத்துக்களில் உள்ள குடியிருப்பு வீடுகளைப் பொறுத்து எவ்விதமான உறுத்துக் கட்டளைப் பரிகாரங்களையும் மனுதாரர் கோரவில்லை என்பதிலிருந்து அவர் துாய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்பது தெரிய வருகிறது. 2ஆம் எதிர்மனுதாரர் எப்போதாவது விவசாய நிலத்திற்கு சென்று வருவது வழக்கம். அப்போது மனுதாரர் தனது ஆட்களுடன் வந்து 1, 2 எதிர்மனுதாரர்களுடன் பிரச்சனை செய்வதை வாடிக்கையாக கொண்டுள்ளார். மேலும், 1 ஆம் எதிர்மனுதாரரை நிலத்தை விட்டு வெளியேறுமாறு மிரட்டியதால் தாலுகா காவல் நிலையத்தில் CSR No.312/2025 போடப்பட்டுள்ளது. மனுதாரர் அவரது கட்டுப்பாட்டில் உள்ள 2, 3, 4 இனச் சொத்துக்களைப் பொறுத்து எவ்வித பரிகாரமும் கோராததால் முதல்நிலை வழக்கும், சமநிலை வாய்ப்பும் மனுதாரருக்கு ஆதரவாக இல்லை. மனு தள்ளுபடி ஆக வேண்டும்.

**4. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :-**

அசல் வழக்கின் 1 முதல் 3 இனச்சொத்துக்கள் பாப்பம்மாளுக்கு சுயார்ஜித கிரையப்படி பாத்தியப்பட்டது ஆகும். 4ம் இனச் சொத்து முத்துச்சாமியால் கிரையம் பெறப்பட்டு அனுபவித்து வரப்பட்ட சொத்தாகும். முத்துச்சாமி 03.07.1993 அன்று பாப்பம்மாள், வாதி, 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதி ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். 04.07.2001 அன்று பாப்பம்மாள் உயில் ஆவணம் ஏற்படுத்தியது உண்மை. மேற்படி உயில் ஆவணத்தில் வாதி, 1,4 பிரதிவாதிகளுக்கு தலா 3ல் 1 பங்கு உரிமை உள்ளது. பாகப்பிரிவினை செய்துகொள்ள 4ம் பிரதிவாதி எப்போதும் தயாராக உள்ளார். 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினைக்கு முன்வராமல் காலம் தாழ்த்தி வருகிறார். 11.12.2024 அன்று 2,3 பிரதிவாதிகள் மனுச்சொத்தில் உழவு செய்ய முயன்றபோது, அது குறித்து வாதி கொடுத்த தகவலின்பேரில் வந்த 4ம் பிரதிவாதி கூறியதையும் கேட்காமல்

2,3 பிரதிவாதிகள் மிரட்டியுள்ளனர். வழக்குச் சொத்தில் 3ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. 1ம் பிரதிவாதி வழக்குச்சொத்துக்களில் வாதி மற்றும் 4ம் பிரதிவாதியின் பாகத்தைக் கொடுக்காமல் ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் 3ம் பிரதிவாதிக்கு ஒத்திக்குக் கொடுத்துள்ளதாகக் கூறிவருகிறார்.

5. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்/வாதிகள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.13 வரையான சான்றாவணங்களும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

7. தீர்வு :-

7.1. மனு, எதிர்உரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் 1 முதல் 3 இனச்சொத்துக்கள் மனுதாரர், 1,4 எதிர்மனுதாரர்களின் தாயார் பாப்பம்மாள் என்பவரால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவா 4ம் இனச் சொத்தானது அவர்களின் தகப்பனார் முத்துச்சாமியால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சங்கதிகள் எதிர்மனுதாரர்கள் தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

7.2. முத்துச்சாமி 03.07.1993 அன்று இறந்துவிட்டார் என்றும், பாப்பம்மாள் 04.07.2001 அன்று 1 முதல் 3 இனச்சொத்துக்களைப் பொறுத்து உயில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாகவும், அதில் 1 முதல் 3 இனச்சொத்துக்களைப் பொறுத்து மனுதாரர், 1,4 எதிர்மனுதாரர்களுக்கு சம பாத்தியம் வழங்கியுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி சங்கதியும் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பாப்பம்மாள் 04.07.2001 அன்று இறந்துவிட்டபிறகு மேற்சொன்ன உயில் ஆவணம் அமலுக்கு வந்ததாகவும், முத்துச்சாமி மற்றும் பாப்பம்மாள் இறந்துவிட்ட நிலையில் தாவா 4 இனச் சொத்திலும் மூவருக்கும் சம பாத்தியம் இருப்பதாகவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி சங்கதியும் எதிர்மனுதாரர்கள் தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

7.3. மனுதாரர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை பார்ப்பதால் அவர் பணியிடங்களில் தங்கியிருக்க நேர்ந்ததால் மனுச்சொத்தான தாவா 1ம் இனச்சொத்தை 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் அனுபவித்து வந்ததாகவும், 2003ம் ஆண்டு மனுதாரர் பணி ஓய்வு பெற்ற பிறகு 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்களை மனுதாரர் அணுகி பாகப்பிரிவினை செய்துகொள்ள கேட்டபோது எதிர்மனுதாரர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை என்றும், 11.12.2024 அன்று 10.00 மணியளவில் மனுதாரர் மனுச்சொத்திற்கு வந்தபோது 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் உழவு செய்து கொண்டிருந்ததாகவும், அதைப்பற்றி மனுதாரர் கேள்வி எழுப்பியபோது 2,3 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை மிரட்டியதாகவும், முறையாகப் பாகப்பிரிவினை செய்துகொள்ளுமாறு 1ம் எதிர்மனுதாரருக்கு ஊர் பெரியவர்கள் அறிவுறுத்தியபோது அதனை அவர் கேட்டுக்கொள்ளவில்லை என்றும், மனுதாரரின் பாகத்தையும் சேர்த்து அவர்கள் உழவு செய்து வருவதால் மனுச்சொத்தில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் பாகப்பிரிவினை முடியும் வரை உழவு செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க வேண்டும் என வாதிடப்பட்டது.

7.4. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் பாப்பம்மாளுக்குச் சொந்தமான 40 பவுன் நகைகள் மற்றும் பொதுக்குடும்ப நிதி ரூ.2,00,000/– ஆகியவற்றை பாப்பம்மாள் இறந்தபிறகு வாதியும், 4ம் எதிர்மனுதாரரும் எடுத்துச்சென்றுவிட்டதாகவும், பின்னர் பைசல் பேசப்பட்டபோது அவற்றை 1ம் எதிர்மனுதாரருக்கும் திருப்பிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள் என்றும், ஆனால் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை என்றும், 21.09.2012 அன்று 1ம் பிரதிவாதிக்கு மனுதாரரும், 4ம் எதிர்மனுதாரரும் விற்பனை இல்லாத பொது அதிகார ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு வயோதிகம் காரணமாக விவசாயப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என்பதால் 3ம் பிரதிவாதியை பணிக்கு அமர்த்தி பராமரித்து வருவதாகவும் வாதிடப்பட்டது.

7.5. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில், தாவா 2,3,4 இனச்சொத்துக்களில் உள்ள 5 Portion–களைக்கொண்ட குடியிருப்பு வீடுகளை வாதி மாத வாடகைக்கு விட்டு வருமானம் ஈட்டி வருவதாகவும், அதனால்தான் அந்தச் சொத்துக்களைப் பொறுத்து மட்டும் எவ்வித இடைமனுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், பொதுக்குடும்ப நிதி

ரூ.2,00,000/– மற்றும் தங்க நகைகள் 40 சவரன் ஆகியவற்றை மறைத்து அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுச் சொத்தில் 1ம் எதிர்மனுதாரர் ரூ.5,00,000/– செலவழித்து நிலத்தை வளப்படுத்தியுள்ளதாகவும், மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரை நிலத்தை விட்டு வெளியேறுமாறு மிரட்டி வருகிறார் என்றும் தெரிவித்து வாதிடப்பட்டது.

7.6. வழக்குச் சொத்துக்கள் பாப்பம்மாள் மற்றும் முத்துச்சாமியால் கிரையம் பெறப்பட்டது என்பது குறித்தும், வாதி, 1,4 பிரதிவாதிகளுக்கிடையிலான உறவு முறை குறித்தும் பாப்பம்மாள் எழுதிவைத்த உயில் குறித்தும் இருதரப்புக்கும் இடையில் ஆட்சேபணைகள் இல்லை. மனுதாரர் 1ம் இனச்சொத்தைப் பொறுத்து மட்டும் இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியுள்ளார். அதிலும், 1ம் இனச்சொத்தில் பாகப்பிரிவினை ஏற்படும் வரை உழவு செய்யக்கூடாது என அவர் இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியுள்ளார்.

7.7. அசல் வழக்கில் 2,3,4 இனச்சொத்துக்களில் உள்ள வீடுகளை மனுதாரர் வாடகைக்கு விட்டு வருமானம் ஈட்டி வருவதைப் பற்றியும், பொதுக்குடும்ப நிதி மற்றும் 40 சவரன் நகைகள் பற்றியும் 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையை மறுத்து பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 21.09.2012 தேதியிட்ட விற்பனையில்லாத பொது அதிகார ஆவணம் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.8. 1ம் இனச்சொத்தைப் பொறுத்து மனுதாரரும், 4ம் எதிர்மனுதாரரும் பதிவு செய்யப்படாத பொது அதிகார ஆவணத்தை எழுதிக்கொடுத்தார்களா என்பது பற்றியும் 2 முதல் 4 இனச்சொத்துக்களை வாதியே அனுபவித்து வருவதாகச் சொல்வது உண்மையா என்பது பற்றியும், வழக்கில் சேர்க்கப்படாத பொதுக்குடும்ப நிதி மற்றும் நகைகள் உள்ளதா என்பதைப் பற்றியும் இருதரப்பு சாட்சிகளை விசாரித்து, சான்றாவணங்களை பரிசீலித்தால் மட்டுமே முடிவுக்கு வர இயலும். இவ்வாறான சூழலில் 1ம் இனச்சொத்து முழுவதையும் உழவு செய்யக்கூடாது என கூட்டுப் பங்குதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிப்பது சரியல்ல என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14–ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.11.14 17:50:45 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி :–</u> : இல்லை

<u>மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்கள் :–</u>

| | | |
|---|---|---|
| மா.சா.ஆ.1. | : | 27.01.2000 தேதியிட்ட பாப்பம்மாள் பெயரில் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் – சான்று நகல். |
| மா.சா.ஆ.2. | : | 04.07.1980 தேதியிட்ட பாப்பம்மாள், காளியம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணம் – நகல். |
| மா.சா.ஆ.3. | : | 04.07.1980 தேதியிட்ட பாப்பம்மாள், A.நாச்சிமுத்து என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணம் – நகல். |
| மா.சா.ஆ.4. | : | 26.08.2024 தேதியிட்ட பட்டா எண்.601– பாப்பம்மாள் பெயரில் உள்ள பட்டா – வலைதள நகல். |
| மா.சா.ஆ.5. | : | 15.03.1967 தேதியிட்ட முத்துச்சாமிக்கு கருப்பச்சாமி எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம். – நகல். |
| மா.சா.ஆ.6. | : | 03.07.1993 தேதியிட்ட முத்துச்சாமியின் இறப்பு சான்று – நகல். |
| மா.சா.ஆ.7. | : | 04.07.2001 தேதியிட்ட பாப்பம்மாள் எழுதி வைத்த உயில் சாசனம். – சான்று நகல். |
| ம.சா.ஆ.8. | : | 04.08.2012 தேதியிட்ட பாப்பம்மாளின் இறப்பு சான்று– நகல் |
| ம.சா.ஆ.9. | : | 10.01.2025 தேதியிட்ட பாப்பம்மாளின் வாரிசு சான்றிதழ் – கணினி நகல். |
| ம.சா.ஆ.10. | : | 21.10.2024 தேதி பாப்பம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீது இணைய தள ரசீது. |
| ம.சா.ஆ.11. | : | 21.10.2024 தேதியிட்ட பாப்பம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீது இணைய தள ரசீது. |
| ம.சா.ஆ.12. | : | 21.01.2025 தேதியிட்ட பாப்பம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது–நகல். |
| ம.சா.ஆ.13 | : | 21.10.2025 தேதியிட்ட முத்துச்சாமி பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது. நகல். |

**<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி :–</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| எ.மா.சா.ஆ.1. | : | பாப்பம்மாள் பெயரில் உள்ள கனரா வங்கி கணக்கு புத்தகங்கள் (2 எண்ணிக்கை) – அசல். |
| எ.மா.சா.ஆ.2. | : | 21.09.2012 தேதியிட்ட விற்பனையில்லாத பொது அதிகார ஆவணம் – அசல். |
| எ.மா.சா.ஆ.3. | : | 29.03.2025 தேதியிட்ட பழனி தாலுகா காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் ரசீது – அசல். |

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.11.14 17:50:57 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**